Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 29-6-1946 ஆனிமீ 15உ { மலர் 38

# தமிழ்த் தேர்தல்

★

(வித்வான் P. பெரியசாமி B.A., B.L., அரசாங்க வழக்கறிஞர்)

காலம் போய்க்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும், வழக்கம்போல் சென்னை சர்வகலா சாலையார் தமிழிலும் மற்றநாட்டு மொழிகளிலும் தேர்தல் நடத்தி வருகிறார்கள். தேறுகிறவர்கள் தேறுகிறார்கள், எண்ணிறந்த மற்றவர்கள் தேர்ச்சியடையாது திகைக்கிறார்கள். இந்த தேர்தலுக்கு அமைத்திருக்கும் முறைகளில் மாற்றம் அடிக்கடி நிகழ்வது உண்டு. அம்மாற்றம் மிக்க ஏமாற்றத்தையே விளைவிக்கின்றது.

பல நாளாகவே சென்னை சர்வகலாசாலை தன் கடின சித்தத்திற்குப் பெயர் போனது. பிற சர்வ கலாசாலைகள் மாணவர்கள் எவ்வளவு பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய பரிட்சை நடத்துவது உண்டு. ஆனால் நம் சென்னை சர்வகலாசாலையின் முறையோ முற்றிலும் மாறானது. மாணவர்களின் அறியக்கூடாமையை அளந்து பார்க்கும் திறமையைக் கையாள்வது. இதற்குத் தப்பியவர்கள்தான் தேர்ச்சி பெற்றவர்கள். பொதுவாகவே இவ்வாறு கடின முறையைக் கையாளும் சர்வ கலாசாலையார் தனித்தமிழ் தேர்தல்களில், தனி முறையான கடுமைகளை அமைத்திருக்கின்றனர். ஆண்டுதோறும் வெளியிடப்படும் சர்க்கார் அறிக்கையால் (கெஜட்) இவற்றை எளிதில் அறியலாம். உதாரணமாக 1945, கிழக்கு மொழிகளில் நடத்திய தேர்தல்களின் புள்ளி விவரங்களை எடுத்துக்கொள்வோம்.

| பட்டம் | மொழி | தரம் | தேர்ச்சி அடைந்தவர் | தேறாதவர் | தேர்ச்சி அடைந்தவர் பார்சன்டேஜ் |
|---|---|---|---|---|---|
| சிரோன்மணி | சமஸ்கிருதம் | (முன்நிலை) பிரிலிமினரி | 57 | 9 | 86·4 |
| " | " | (முடிநிலை) பைனல் | 62 | 10 | 86·1 |
| வித்வான் | 7. எ. சமஸ்கிருதமும் மற்றொரு மொழியும் | பிரிலிமினரி | 23 | 5 | 82·1 |
| | | பைனல் | 11 | 2 | 84·6 |
| | 7. பி. சமஸ்கிருதம் சிறிதும் மற்ற மொழி சிறந்தும் | பிரிலிமினரி | 89 | 9 | 90·8 |
| | | பைனல் | 97 | 39 | 71·3 |
| | 7. டி. தனித்தமிழ் | பிரிலிமினரி | 81 | 93 | 47·5 |
| | " | பைனல் | 64 | 42 | 60·4 |

வடமொழியிலும், வடமொழியுடன் கூடிய மற்ற மொழிகளிலும், தேறியவர்கள் மிகப்பலர், தேறாதவர் மிகச் சிலரே. நம் தாய்மொழியாம் தனித்தமிழ் மொழியில் தேறாதவர்கள் மிகப்பலர். அதிலும் சில வேளை, தேறாதவர்களின் எண்ணிக்கைத் தேர்ந்தவர்களின் எண்ணிக்கையைத் தோற்கடித்துவிடுகிறது. இதன் ரகசியம்தான் என்ன? மற்ற மொழிகளைவிட தமிழ்மொழி கடினமா? அல்லது பாடப்பகுதி அளவுகடந்து இருக்கிறதா? அல்லது கேள்விகள் யாரும் அறியவேண்டாத மூலை முடக்குகளிலிருந்து பரிட்சைக்கென்றே பொறுக்கி எடுக்கப்படுகின்றனவா? அல்லது தமிழின் உயர்வை வளர்க்க வழி இதுதான் என்று தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றதா? அல்லது தேர்தல் அதிகாரிகள் குறைந்த அளவு மார்க்கே போடும் வழக்கம் உடையோரா? எதுவென்று தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் தனித்தமிழ் தேர்தலில், தேறாதவர்களே எண்ணிறந்த பலராக இருக்கக் காணலாம்.

கீழ்நாட்டுமொழிகளில் தேர்தல்கள் நடக்கும்பொழுது, ஒரே காலத்தில் எல்லா மொழிகளிலும் தேர்தல்கள் நடைபெறுகின்றன. பிற மொழிகளில் விடை எழுதிவந்த மாணவர்கள் உரத்த குரலில் ஒருவரோடு ஒருவர் அளவளாவுவதும் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற முகத்தோடும் காட்சி தருவர். ஆனால் தனித்தமிழ் தேர்தலில் விடை எழுதிய மாணவர்கள் பூனைமுன் கீச்சு கீச்சென்னும் கிளிபோலவும், தேர்தலுக்கு வந்தோம் தென்திசைக் காவலரால் அறைபட்டோம் என்ற உணர்ச்சியோடும், குனிந்த தலையோடும், தளர்ந்த உள்ளத்தோடும், நடந்து ஒளிவர். வெகு

தொல்லையோடு தொடர்ந்தாற்போல் உற்றுக்கேட்கில் "எதிர்பாராத இடத்தில் வந்தது கேள்வி, முலைமூடக்கு எப்படி அவர் கண்ணுக்குப்பட்டதோ? இவ்வளவு பெரிய காவியத்திலிருந்து இந்த சிறு துணுக்குதானா? இப்படியிருக்கும் என்று எதிர்ப்பார்க்கவே இல்லை. இந்த நடனம் மோசம் போய்விட்டோம். கேள்வித்தாள் ஏமாற்றமே விளைவித்தது, என்ன தான் எழுதினாலும் எவ்வளவு குறைபாடு தெரியுமோ" என்ற வார்த்தைகள் ஈனக்குரலில் வருவதைக் கேட்கலாம்.

பாடப்பகுதிகள் எவ்வாறாயினும் ஆகுக. அவைகளிலிருந்து பொறுக்கப்படும் கேள்விகள் நேர்முகமாக இருந்து, மாணவர்களை மாணவர்களாக மதித்து தேர்தல் அதிகாரிகள், விடைத்தாள்களை மதிப்பிட்டால் தனித்தமிழ் தேர்தலில் எண்ணிறந்தோர் தேர்ச்சிபெறாமல் இருக்கக் காரணமில்லை. தேர்தல் அதிகாரிகள் தாங்கள் எவ்வளவு கற்றும் கேட்டும் இருக்கின்றார்களோ, அவ்வளவும் மாணவர் விடைத்தாள்களில் எதிர்ப்பார்க்கின்றனர் போலும்.

இந்தத் தொல்லை தனித்தமிழ் தேர்தலில் மாத்திரம் இல்லை. பிற தேர்தல்களில் எஸ். எஸ். எல். சி. இண்டர்மீடியட், பி. ஏ. வகுப்புத் தேர்தல்களுக்கு உரிய தமிழிலும் உண்டு. பிறமொழிகள் தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி முதலிய பயிலும் மாணவர்கள், அம்மொழிகளில் நிறைய மார்க்கு வாங்குவதன் பயனாக மொத்த மார்க்கு அதிகமாகப் பெருகி அவர்கள் முதல் வகுப்பிலும், தேர்ச்சி அடைய உதவுகிறது. ஆனால் தமிழ் பயிலும் மாணவர் கல்லைக் கட்டிக்கொண்டு நீச்சல் பழகியவர்போல், தமிழில் சரிவர மார்க்கு எடுக்காமையால், மொத்த மார்க்கு குறையப்பட்டு, கீழ்தரத்தில் தேர்ச்சி அடைகிறார்கள். எஸ். எஸ். எல். சி. பிள்ளைகள் கலாசாலை வகுப்பில் சேரும் போது மொத்தத்தில் 100க்கு 50 மார்க்கு எடுத்த மாணவர்களைத்தான் தங்கள் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளுவதாகச் சிலகலாசாலை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். அப்போது பிற மொழி மாணவனுக்கு இடங்கிடைக்க, இன்பத்தேன் பாயும் செந்தமிழ் மாணவன் இடைக்காது பல் இளிக்கக் காண்கிறோம். இக்காட்சியும் தனித்தமிழ் அதிகாரிகளுக்கு ஒரு அணிகலன் போலும்.

இவ்வித இன்னல்களால் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு நேரிடும் இடையூற்றுக்கு எல்லையில்லை. மாணவர்களை மண்படுத்துவதால் நாட்டின் நிலை எவ்வாறு புண்படும் என்பதை அன்னார் யோசிப்பதும் இல்லை. இவர்களும் ஒரு காலத்தில் தாங்கள் மாத்திரம் வாழ்ந்து, பிறரை வாழவொட்டாமல் தம்மை வந்து அடைந்தாரை நான்புறத்தவர் என்று எண்ணியே தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

அரம் போலும்
கூர்மையரேனும் மரம்
போல்வர் மக்கள்
பண்பில்லாதவர்,

என்று அருளினர் போலும். தொன்று தொட்டு வரும் இந்தக்கொடுமை நீங்கி தமிழ் மாணவர் இன்புற்று இருப்பது எந்நாளோ பராபரமே!

---

## செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு

13, 14-7-46 ஆகிய இருநாட்களிலும் செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு காஞ்சிபுரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெறும்.

"சந்திரோதயம்", "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" ஆகிய இரு நாடகங்களும் நடைபெறும்.

டிக்கட் விபரம்:-

| | | |
|---|---|---|
| போஷகர் கட்டணம் | ரூ. | 100-0-0 |
| ஆதரவாளர் | " | 25-0-0 |
| வரவேற்பாளர் | " | 10-0-0 |
| பிரதிநிதி | " | 5-0-0 |
| பார்வையாளர் | " | 2-0-0 |
| பெண்கள் | " | 1-0-0 |

---

## தேவை

டபுள்பீடர் மிஷினில் வேலை செய்ய திறமைவாய்ந்த மிஷின்மேன் தேவை. முன் அனுபவம், குறைந்த பட்ச சம்பளம் இவைகள் குறித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

M. M.
C/o குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

## அடுத்தவாரம்

23-6-46ல் சென்னையில் நடந்த விசேஷ அவசர நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின் நடவடிக்கைகளும், தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும் அடுத்த இதழில் வெளிவரும்.

---

## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம். ஈரோடு.

---

## அறிவிப்பு

உதவி சப்ஏஜன்ஸி நியமனம்

1-6-46 முதல் கொழும்பு காலி ரோடு பம்பலப்பிட்டி 59 நெ. இல்லத்திலிருக்கும், தோழர் எஸ். சந்தனம் அவர்களை கொழும்பு டவுனுக்கு (1) குடி அரசு, (2) திராவிடநாடு, (3) உதயசூரியன், (4) குமரி, (5) இந்தியத்தாய் ஆகிய, பத்திரிக்கைகளை விநியோகம் செய்ய, கமிஷனுடன் நியமிக்கப்பட்டிருக்கிறது. திட்டத்தின்படி சப் ஏஜண்ட் அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால் ஏஜன்ஸி பதவியை ரத்துசெய்யப்படும். பத்திரிக்கைகள் முறையே ஸ்டோர் விலாசத்திற்கே வரும், கடிதம் எழுதுவோர் கவனிக்க. மானேஜர் குடி அரசு ஸ்டோர் என்றே எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் தேக சவுக்கியமின்மையால் தாய்நாடு செல்வதால், ஸ்டோர் அலுவல்களைக் கவனித்துக்கொள்ள தோழர் எஸ். டேனியல் தாமஸ், டைலர் திரு கே. எஸ். பாலசுந்தரம், இவர்களுக்கு உரிமை கொடுத்துள்ளேன். இப்படிக்கு பி. எஸ். எம். தொம்பையா, அதிபர், குடி அரசு ஸ்டோர், 130, முகாந்திரம் ரோடு, கொள்ளுபிட்டி கொழும்பு.

## கோவை மாவட்ட

# திராவிடர் மாநாடு

கோவை மாவட்டத்திராவிடர்கழக மாநாடு 16-6-46ல் ஈரோடு சொல்லம்பாளையம் ரோடு காஸ்மாபாலிட்டன் கிளப்புக்கு அருகிலுள்ள வக்கீல் தோழர் அண்ணாமலைப் பிள்ளை அவர்களின் காலியிடத்தில் அமைக்கப்பட்டிருந்த "நாகம்மையார் பந்தலில்" நடைபெற்றது. தலைவர்கள் பெரியார் ராமசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், குடந்தை முத்து தனபால், பெத்தாம்பாளையம் பழனிசாமி, எம். கே. குகநாதன் ஆகியோர் பட்டக்காரர் பங்களாவிலிருந்து ஊர்வலமாக பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் 1000-க்கு மேற்பட்ட கறுஞ்சட்டை யணிந்த தொண்டர்களும், மேலும் 2000 மக்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் காலை 9 மணிக்குப்புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச்சென்று 10-30 மணிக்குமேல் பந்தலை யடைந்தது. ஊர்வலத்தில் 'வாழ்க' என்ற வாழ்த்தொலிகளும், 'ஒழிக' என்ற புரட்சி ஒலிகளுமே எழுப்பப்பட்டன.

மாநாட்டுக்கு திருப்பூர், உடுமலை, தாராபுரம், ஆனமலை, பொள்ளாச்சி பவானி, குமாரபாளையம், கோபி, சத்தியமங்கலம், கணியூர், கோவை முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகளும், கரூர், சேலம், திருச்சி முதலிய இடங்களிலிருந்து பார்வையாளர்களும் முதல்நாள் மாலையிலிருந்தே வந்துகொண்டிருந்தார்கள். வந்தவர்களைப் புகைவண்டி நிலையத்தில் மாநாட்டுத் தொண்டர்கள் வரவேற்றனர். மாநாட்டுப் பந்தலில் முற்கூட்டியே ஏராளமான மக்கள், பெண்கள், தொழிலாளர்கள் உட்பட 5000 பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர்.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் நீண்ட கைத்தட்டலுக்கிடையே எழுந்து சென்றஆண்டு கோவை மாவட்டம் உறுப்பினர்கள் சேர்ப்பதில் முதன்மை வகித்த மகிழ்ச்சியில் மூழ்கிக்கிடக்காமல் இவ்வாண்டிலும் இரட்டிப்பு முயற்சி எடுக்கவேண்டுமென்றும், தாம் தமது பங்குத் தொண்டையாற்றத் தயாராக விருப்பதாகவும், மற்றும் புதிய வாலிபர்கள் தியாக புத்தியுடன் முன்னுக்கு வரவேண்டுமென்றும், திராவிடர் கழகம் ஒன்றேதான் நாட்டு மக்களுக்கும், குறிப்பாகத் தொழிலாளர்களுக்கும் நலன் பயக்கக் கூடுமென்றும், ஆகவே திராவிடர் கொடியைக்காக்க உயிர்கொடுக்கவும் சித்தமாக உண்மைத் திராவிடர்கள் இருக்கவேண்டுமென்றும் சொற்பொழிவாற்றி நீண்ட வாழ்த்தொலிக்கிடையே செஞ்சின்னமுடைய திராவிடர் கழகக் கறுப்புக்கொடியை ஏற்றுவித்தார்.

குடந்தை தோழர் முத்து தனபால் மாநாட்டைத் திறந்துவைக்கையில் நாலாவது ஐந்தாவது ஆறாவது வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிப்பதை மந்திரிசபையார் நீக்கியது திராவிடர்களுக்கு ஊறு செய்வதென்றும் நமது பிள்ளைகள் அநேகம்பேர் ஆறாவது வகுப்புக்குமேல் படிப்பதில்லையாதலால் அவர்களுக்கும் ஆங்கிலம் கற்க வசதி வேண்டுமாதலால் அந்த உத்தரவை உடனே ரத்துசெய்ய வேண்டுமென்றும் கூறினார். மேலும் இன்றும் நீதி மன்றங்களில்கூட திராவிடர்களுக்கு நீதி கிடைப்பது அருமையாக விருக்கின்றது என்று கூறி அதற்கு உதாரணமாகக் குடந்தையில் 1941ல் சலவைத் தொழிலாளர் ஒருவரின் பிணத்தை பார்ப்பன வீதி வழியாகக் கொண்டு சென்றதற்கு நடந்த வழக்கில் தீர்ப்புக்கூறிய ஆரியர் ஒருவர் "இன்றும் ஒரு சாதியாரைப் பற்றி மற்றொரு சாதியார் இழிவாகப் பேசுவதையும் பிரச்சாரம் செய்வதையும், அரசாங்கம் தடுக்காமலிருப்பது வருந்தத்தக்கது" என்று கூறியுள்ள தீர்ப்பு நகலைப் படித்துக் காட்டினார். இதுபோன்ற இழிவுகள் நீக்கப்பட எல்லோரும் திராவிடர் இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி மாநாட்டைத் திறந்துவைத்தார்.

பின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் எம். கே. குகநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றி (வரவேற்புரை அடுத்த இதழில்) மாநாட்டிற்குத் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்களைத் தலைமைதாங்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார். நீண்ட கைத்தட்டலுக்கும் வாழ்த்தொலிக்குமிடையே தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தலைமையுரையில் ஆரியர் திராவிடர் பேதம் பற்றித் தெளிவாக எடுத்துக்காட்டி, நாடு பிரிக்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியதோடு, தேசியத் திராவிடத் தோழர்களாவது வெள்ளையன் வெளியே செல்லவேண்டும் என்பதோடல்லாமல் வடநாட்டவரும் பார்ப்பனரும் ஆகிய சுரண்டல்காரர்கள் எல்லோருமே வெளியேறவேண்டும் என்று துணிவாகக் கூறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கடைசியாக நமது திராவிடர் கழகம் அகில இந்திய இயக்கமாக ஆக்கப்படவேண்டுமென்றும் அதற்காக எல்லா திராவிட மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தினசரிகள் நடத்தவேண்டுமென்றும் பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்வதாய்க்கூறினார்.

பின்னர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் திராவிடநாட்டுப் படத்தைத் திறந்துவைத்து "நம்மியக்கம் இப்பொழுது எல்லாத் திராவிடத் தோழர்களாலும் பல்துறையிலும் பலப்படுத்தப்பட்டு வருகிறதென்றும். தேசியத் தோழர்கள் "தங்கள் தியாகத்தை"க் காட்டி வேண்டுமானால் மந்திரிகளாக முடியும். ஆனால் திராவிடர் கழகமோ ஒருகாலத்தில் உலகம் முழுதும் போற்றும் நிலையை யடையும் என்பது உறுதியென்றும், இதற்காகக் கறுஞ்சட்டைப் படையினர், பார்ப்பனீயப் பத்திரிகைகள் எவ்வளவு விஷமப்பிரச்சாரம் செய்தாலும், பெருந்தொண்டாற்றி வருகின்றார்களென்றும், இயக்கத்திற்குப் பலத்த விளம்பரம் ஏற்பட்டுவிட்டதென்றும், அவர்கள் முயற்சி வீணடையாதென்றும், கொட்டகைகளுக்குத் தீ வைப்பதால் கொள்கையை ஒழித்துவிட முடியாதென்றும் கூறியதோடு கறுஞ்சட்டைப் படையினர் கட்டுப்பாட்டுடனும், ஒழுங்காகவும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார். திராவிடத் தோழர்கள் சமுதாயத்தில் தங்களுக்குள்ள இழிநிலையைத் தங்களின் வருங்கால சந்ததியார்களுக்கு விட்டு

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் ஜூன்-மீ 29உ

# சிலை வணக்கமும் திராவிட கழகமும்

"விக்ரக ஆராதனை (சிலை வணக்கம்) யைக் கண்டித்துத் தாங்களும், இயக்கத் தோழர்களும், அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிறீர்கள். திராவிடர் கழகம் ஒரு அரசியல் கட்சி இயக்கம். சுயமரியாதை இயக்கத்தைப் போல் வெறும் சமுதாய சீர்திருத்த இயக்கமல்ல. அரசியல் கட்சியில் பல்வேறு கொள்கைகளையுடையவர்களும் இருப்பார்கள்; இருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரே இப்போது திராவிடர் கழகமாக மாறியிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. தெ. இ. ந. உரிமைச் சங்கம் என்ற பெயரால் ஒரு 10—20 பேர் தனியாகப் பிரிந்து போனாலும், அவர்களைப் பற்றி மக்கள் கடுகளவு கூட அக்கரை யெடுத்துக் கொள்வதில்லை. அந்த பத்து இருபது பேர்களிலேயே ஒரு சிலர் மெள்ள மெள்ள திராவிடர் கழகத்திற்குள் வழுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரி நிலைமையில் தாங்கள் சிலை வணக்கத்தைப்பற்றிக் கண்டிக்காமலிருப்பதே நல்லது என்று யோசனை கூறுகிறேன். நம்முடைய கழகமானது பலவிதமான ஆறுகளும் வந்து விழக்கூடிய பெருங் கடலாக இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை. ஆகையால் தயவு செய்து சிலை வணக்கத்தைக் கண்டிப்பதை நிறுத்திவிடக் கோருகிறேன்"

இந்தக் கடிதம் நமது இயக்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரால் பெரியார் அவர்களுக்கு எழுதப்பட்டதாகும். இதை எழுதியவர் பெரியாரோடு நெருங்கிப் பழகுபவரும் பல ஆண்டுகளாய்த் தோழராய் இருந்து வருபவருமாகும்.

இவரைப்போன்றே இன்னும் பல தோழர்கள் அடிக்கடி கடித மூலமாகவும், நேரிலும் இந்த சந்தேகத்தைக் கேட்டு வருகிறார்களாதலால் இக்கடிதக்காரருக்கும் பிறருக்கும் பதில் கூற வேண்டியது நம் கடமையாகிறது.

அது மட்டுமல்ல. இம்மாதிரியான காரணங்களைக் கூறியே நம் எதிரிகளும் கட்சியை விட்டுச் சிதறிப்போன தோழர்களில் இரண்டொருவரும் தமிழ் மக்களிடையே விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

திராவிடர் கழகம் அரசியல் கட்சிதான். அதுவும் இனிமேல் தென் இந்தியாவில் முதல்தரமான அரசியல் கட்சியாக விளங்கப்போகிற கட்சியுங்கூட. பல கொள்கைக்காரர்கள் இக்கட்சியில் கலந்திருக்கிறார்கள். ஆனாலும் ஹிந்துக்கள் அல்லாதவர்கள் என்று கூறப்படும் வேறு மதத்தினரும், வேறு பிரிவினரும் தங்களுக்கென தனித் தனிக் கட்சிகளை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக இந்திய கிருஸ்துவர்கள் தனிக்கட்சியாக இருக்கின்றனர்; முஸ்லிம்களும் தனிக் கட்சியாக இருக்கின்றனர்; ஆங்கிலோ இந்தியர் தனிப்பிரிவாக இருக்கின்றனர்; தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் சிலர் கூட தங்களுக்கென 'ஷெட்யூல் வகுப்பு பெடரேஷன்' என ஒரு தனி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் திராவிடர் கழகத்தில் இரண்டறக் கலந்திருக்கின்றனர் என்பதும் பகிரங்க ரகசியம்.

ஆகவே திராவிடர் கழகத்தின் அடிப்படையான தத்துவங்களில் நம்பிக்கை வைத்து அதன் முக்கிய குறிக்கோள்களில் கவலையும் வைத்திருக்கும் ஆரியரல்லாத "ஹிந்துக்கள்" என்பவர்களே இக்கழகத்தில் அங்கத்தினராக இருந்து வருகின்றனர் என்பதை மறுக்க முடியாது. ஆனாலும் அநேக முஸ்லீம் தோழர்களும், கிருஸ்துவ நண்பர்களும் பிறரும் திராவிடர் கழகத்தின் அனுதாபிகளாக இருந்து உதவிசெய்து வருகின்றனர் என்பதையும் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தென் இந்திய சமுதாய அமைப்பில் ஆரியரல்லாத நம் இனத்தவர் இப்போதுள்ள இழிநிலையை அடைந்திருப்பதற்குக் காரணம் ஹிந்து மதம் என்று கூறப்படும் ஆரியமதமேயாகும் என்பதை சரித்திரம் படித்தவர்கள் உணர்வர். ஹிந்து மதத்தில் இருக்கும் ஜாதி வேற்றுமை, சிலை வணக்கம், மூடநம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டு வெறுத்தே பலர் பிற மதங்களைத் தழுவியிருக்கின்றனர், இன்னும் தழுவி வருகின்றனர் என்பதையும் யாராவது மறுக்கமுடியுமா? இந்த உண்மையை உணர்ந்திருக்கும் நாம், 'ஹிந்து மதத்தை விட்டு விலக வேண்டும், அதாவது நாம் ஹிந்துவல்ல; திராவிடர்'' என்று முடிவு செய்திருப்பதில் தவறென்ன என்று கேட்கிறோம்.

ஹிந்துவல்ல என்று கூறுவதற்கே துணிந்திருக்கவேண்டிய திராவிடர் ஹிந்துமதத்திற்கே தனிப்பட்ட உரிமை என்று கூறப்படும் சிலை வணக்கத்தை விட்டொழிப்பதில் தாமதமோ, தயக்கமோ, வெட்கமோ, பயமோ, இருக்குமானால் நம் அடிப்படைக் கொள்கையையே சிலர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லையென்றுதான் கூறவேண்டும்.

சிலை வணக்கத்தை ஒழிப்பதென்றும் இதர மூட நம்பிக்கைகளைக் கைவிடுவதென்பதும், ஹிந்துக்களென்பவர்களின்—அதாவது திராவிடர்களின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று. இதனால் "தனிப்பட்ட கடவுள் நம்பிக்கைகூடவா இருக்கக்கூடாது?" என்று சிலர் கேட்கலாம். அதைப்பற்றி நாம் எதையும் வலியுறுத்துவதில்லை. இந்தவிஷயம் அவரவர் சொந்த அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் முதலியவற்றைப் பொறுத்தது. தனிப்பட்டவரின் மனதிலுள்ள கடவுள் நம்பிக்கையைப்பற்றியோ, நம்பிக்கை இல்லாத உணர்ச்சியைப்பற்றியோ நமக்குக் கவலையில்லை. ஏனெனில் ஒருவருடைய தனிப்பட்ட ஆஸ்திக—நாஸ்திகக் கொள்கையானது பொதுநல விஷயங்களைப் பாதிக்காது. ஏனெனில் பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் தனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்கிறார். அதைப்பற்றி யாரும் லட்சியம் செய்வதில்லை. ஆனால் சிலை வணக்கம் என்பது அப்படியல்ல. திராவிடர் பொருளைச் சுரண்டுவதற்குக் காரணமாயிருந்ததும், இன்றுவரையில் காரணமாய் இருந்துவருவதும் சிலை வணக்கமேயாகும்; ஆரிய நச்சு மரத்திற்கு உரம்போட்டு நீர் ஊற்றி வருவது இந்தச் சிலை வணக்கமேயாகும்; திராவிட அறிஞர்களில் பலர் இன்று ஒரு சோம்பேறி ஆரியனிடம் தலை வணங்கி, வாய்பொத்தி நின்று "பிரசாதம்" வாங்கும்படியான மானமற்ற அடிமைத்தனமான

## திருமண அழைப்பு

திருமணம் முதலாகிய சமூதாய சடங்குகளுக்கு பெரியார் ஈ. வெ. ரா. இனி அழைக்குமிடங்களுக்கெல்லாம் போக வசதி இல்லை என்றும், அப்படி போவதானால் இயக்கவேலைகள் குந்தகப்படுகிறதென்றும், இயக்கத் தோழர்களும் உடல் நலம் முதலியவை கருதி பெரியார் இந்தக் காரியங்களுக்குச் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றும் கருதி இனி அப்படிப்பட்ட காரியங்களுக்கு அழைத்து அசௌகரியப் படுத்தக்கூடாது என்றும் இயக்கத் தோழர்களுக்கு வேண்டுகோள் குடி அரசின் மூலம் விட்டோடு அப்படி கண்டிப்பாக பெரியாரே வரவேண்டுமென்று அவசியமாய்க் கருதுகிறவர்கள் குறைந்தது 50 ரூபாயாவது விடுதலைக்கு நன்கொடை அளித்து அழைக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டோம்.

அப்படி இருந்தும் அதை சரியாய் கவனிக்காமல் பல தோழர்கள் அழைக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி எழுதுவதற்கு பதிலாய் அந்த அறிக்கையை தயவுசெய்து படித்து அதற்கு மதிப்புக்கொடுக்க வேண்டுகிறோம்.

காட்சியைக் காணும்படியான நிலையில் திராவிட இனத்தைத் தாழ்த்தி வைத்திருப்பதும் இச்சிலை வணக்கமேயாகும். தமிழ் வளர்ச்சி என்னும் பேரால், திராவிடர் செல்வத்தை நல்ல வழியில் பயன்படுத்த முடியாமல் தேர் திருவிழாக்களிலும், கோவில் கட்டுவதிலும், பஜனைக்கூடங்களிலும், கொட்டிப் பாழாக்குவதற்குக் காரணமாயிருப்பதும் இந்தச் சிலை வணக்கமேயாகும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், சிலை வணக்கமுறையை ஒழித்துவிட்ட அதே நேரத்தில் ஆரிய நச்சு மரத்தின் ஆணிவேர் ஆட ஆரம்பிக்கும். நம் அநுபவத்திலிருந்தும், பல வரலாற்று ஆதாரங்களிலிருந்துமே நாம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்த நமது முடிவுக்கு ஒரே ஒரு உரைகல் தருகிறோம். சிலை வணக்கத்தை ஆதரித்துப் பேச்சளவிலும் எழுத்தளவிலும் ஆவேச உணர்ச்சியுடன் பேசியும் எழுதியும் வருகிற ஆரிய இனத்தைச் சேர்ந்த எவராவது கோவில் கட்டுவதற்கும், வாகனம் வாங்குவதற்கும், சிலைகளுக்கு நகைகள் வாங்குவதற்கும், சாப்பாடு படைப்பு முதலியவைகளுக்கும் பணம், நிலம் தந்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறோமா என்பதை நமது திருப்பர் ஆர அமர ஆலோசித்துப் பார்க்கட்டும். இந்த விஷயத்தில் நம்மைவிட அவர்கள் புத்திசாலிகள்தான், இதில் வெட்கப்பட்டுப் பலன் என்ன? காரியத்தில் அல்லவா அறிவுடைமையைக் காட்ட வேண்டும்?

இறுதியாக, அரசியல் கட்சியில் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைக் கலக்கலாமா? என்ற சந்தேகத்தைப்பற்றியும் ஒரு வார்த்தை. அரசியல் என்பதே சமுதாயக் கோளாறுகளை ஒழிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஒரு சாதனம் என்பதுதான் நம் கொள்கை. சமுதாய வேலையைக் கலக்காத ஒரு அரசியல் மனித சமுதாயத்திற்கு எதற்காக வேண்டும்?

அரசியலையும் சமுதாயத்துறையையும் பிளந்து கூறுபோட்டு விற்கும் அரசியல் வியாபாரிகள் இந்நாட்டில் பெருகியிருப்பதற்குக் காரணம், ஒரே இனத்தவர், மற்ற இனத்தவரை அழுத்திவைத்து சுரண்டிக்கொண்டு இருப்பதற்காக மறைமுகமாக ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடேயாகும். இந்த உண்மை ஆரியர் விஷயத்தில் மட்டுமல்ல; ஆங்கிலேயர் விஷயத்திலும் பொருந்தும்.

ஆனால் இச்சந்தர்ப்பத்தில் மற்றொரு முக்கிய விஷயத்தையும் வற்புறுத்திக் கூறிவிட விரும்புகிறோம். இச்சமயம் இது விஷயமாய் நாம் செய்யும் பிரசாரம் சிலைகளை அடியோடு அகற்றுவதோ, அழிப்பதோ அல்லது சிலை வணக்கம் செய்வோரின் மனதைப் புண்படும்படியாக செய்வதோ அல்ல என்றும், கண்டிப்பாக அல்ல என்றும், மற்றபடி மக்களை இதுபற்றிச் சிந்திக்குமாறு செய்வதும் அதுபற்றிய செலவை வேறு நல்ல வழிக்கு திருப்புவதும் நம் வேலை என்பதையும் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். இச்சமயத்தில் ஒரு மகிழ்ச்சியானச் சேதியை தெரிவிக்கிறோம். அதாவது இன்றைய மந்திரிகள் கோவில், மடங்களில் மீதியாய் இருக்கும் செல்வத்தைக் கல்விக்குச் செலவுசெய்ய சட்டமியற்றப் போகிறார்களாம். அவர்கள் இவ்விஷயத்தில், சொல்வது போல் நடந்தால், கடவுள் கோபித்துக்கொண்டாலும் மக்களுக்கு நலம்தான். ஆனால் ஆரியர்கள், அவர்களை அப்படிச் செய்ய விடுவார்களா? என்றாலும் பார்ப்போம் சொன்னபடி நடப்பார்களா என்று.

# திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 29-6-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 48,421

இம்மாதம் 29உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 8256 | 7. இராமநாதபுரம் | 3515 |
| 2. தஞ்சை | 7828 | 8. சென்னை இவ்வாண்டில் 1362 | 3232 |
| 3. கோவை | 6459 | 9. தென் ஆற்காடு | 2553 |
| 4. திருச்சி | 5546 | 10. மதுரை | 2042 |
| 5. திருநெல்வேலி | 3548 | 11. செங்கல்பட்டு | 1025 |
| 6. வடஆற்காடு | 3538 | 12. மற்ற இடங்களில் | 879 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

# ஜவகர் பேரால் காங்கரசாரின் அட்டூழியம்

ஈரோடு—

பண்டித ஜவகர் காஷ்மீர் சமஸ்தானத்தில் கைதியானதை முன்னிட்டு 21-6-46ல் ஈரோட்டில் காங்கரஸ்காரர்கள் ஓர் ஊர்வலம் நடத்தினர். கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொள்ள விரும்பியும் காங்கரஸ்காரர்களால் புறக்கணிக்கப்பட்டார்கள். எனவே அவர்கள் தனியாக ஓர் ஊர்வலம் நடத்தினர். காங்கரஸ்காரர்கள் கடையடைப்பு நிர்ப்பந்த வேலையிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர்.

நமது இயக்கத் தோழரான லூர்துசாமி அவர்களின் கடைக்குச்சென்று கடையை மூடவும், கறுப்புக்கொடியை இறக்கவும் பலாத்கார முறையைக் கையாள முயன்றனர். ஆனால் அவர்கள் முயற்சி ஈடேறாமற்போகவே கறுப்புப்புடவை அணிந்திருந்த தோழர் லூர்துசாமியின் தங்கையைக்கண்டு "கறுப்புப்புடவை அணிந்திருக்கும் பெண்கள் விபசாரிகள்" என்று கூக்குரலிட்டும், கண்ணியமற்ற முறையில் கேவலமான முறையில் பேசியும் சென்றனர், மேலும் ஈரோட்டுத் திராவிட கழகத் தலைவர் தோழர் ஈ. வி. பழனியப்பா அவர்களின் கடைக்குச்சென்று காலித்தனமாகப்பேசி, கடையை மூடச் செய்தனர். ஓர் முஸ்லிம் தோழர் கடைக்குள் ஏறிச்சென்று கொள்ளையடிக்க முயலுகையில் அவர்கள் பலாத்காரத்துக்குத் துணிந்தவுடன் கைகலப்பு நேரும்போலிருந்ததைக்கண்ட காங்கரஸ் காலிகள் பயந்து பின்வாங்கினார்கள்.

ஓர் மாம்பழக்கடைக்குள் சூறையாடி, கடைக்குள்ளிருந்த நீர்மோரைக் குடித்துவிட்டு மோர்ப்பானையையும் உடைத்தனர். நஷ்டத்திற்குக் காந்தி கணக்கில் எழுதிக்கொள்ளக் கடைக்காரனுக்குக் காலிகள் யோசனை கூறியது குறிப்பிடத்தக்கதாகும். வீதியில் வந்துகொண்டிருந்த இரண்டு மாம்பழ வண்டிகளிலிருந்த மாம்பழங்களைக் காலிக்கூட்டத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சூறையாடியதோடல்லாமல் வண்டிக்காரர்களையும் துன்புறுத்தினர். மகாசன உயர்நிலைப் பள்ளியிலும், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியிலும் சென்று வற்புறுத்திப் பள்ளிகளை மூடச்செய்ததுமன்றி ஆசிரியர் சிலரைக் கல்கொண்டு தாக்கினர். அரசியலார் ஆசிரியப் பயிற்சிப் பெண் பாடசாலைக்குச்சென்று கட்டிடத்தின் மதிலின்மேலேறிக் கல்லாலடித்தும், காலித்தனமாகப் பேசியும், மங்கையர் மனம் நோகும் வண்ணம் செய்தனர். ஆரம்பப்பள்ளியிற்சென்று ஆசிரியர்களையும் மாணவ மாணவிகளை

யும் பயமுறுத்திப் பாடசாலையை மூடச்செய்தனர். ஈரோட்டுத் தோழர் மீனாட்சிசுந்தர முதலியார் பி.ஏ., எல். டி. அவர்கள் மேற்பார்வையில் நடைபெறும் கலைமகள் கல்வி நிலையத்தில் காலிகள் புகுந்து 4, 5, 6 வயதுச் சிறுமிகளைப் பயமுறுத்தி வெளியே போகச்செய்து, பள்ளியை மூடவும் செய்தனர். சிறுமிகள் அச்சத்தின் மிகுதியால் அலறி அழுத காட்சி காண்பாருக்குக் கடுஞ்சினத்தை மூட்டியது. மேலும் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தனித்துச் செல்கையில் அவர்களைத் தாக்க காலிகள் முயன்றனர். இன்னும் பல கடைகளை பலாத்காரமாக மூடச்செய்தும், வண்டிகளை வழிமறித்தும் வண்டிகளில் வந்த பெண்களைக் கீழே இறக்கியும் பல அட்டூழியங்களைச் செய்தனர்.

இக்காலிகளின் செயல்களைக் கண்ட பொதுமக்கள் மனம் புண்பட்டு மிகவும் ஆத்திரமடைந்தனர். 23-6-46ல் பார்த்தி வாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழாவில் சொற்பொழிவாற்றிய தோழர் மீனாட்சிசுந்தர முதலியார், காங்கரஸ் காலிகளின் அட்டகாசச் செயல்களை, சிறப்பாக அவர் ஆதரவில் நடைபெறும் 'கலைமகள் நிலையத்தில்' நடைபெற்ற அட்டகாசத்தை வன்மையாகக் கண்டித்துப் பேசினார் என்றறிகின்றோம்.

இதே மாதிரியாக பல ஊர்களிலும் ஜவகர் கைதியானதைக் காரணமாக வைத்துக்கொண்டு காலிகள் அட்டூழியம் நடத்தியுள்ளார்கள். மதுரையில் காலிகளின் அட்டகாசம் வகுப்புப் பூசலைக் கிளப்பிவிட்டு அதனால் சுமார் 12பேர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும் இறக்கும்வண்ணம் செய்துள்ளது. இம்மாதிரியாகக் காலித்தனம் நடைபெறுவதற்குத் திராவிடநாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பனர்களின் சூழ்ச்சிதான் காரணம் எனக் கருதவேண்டிய நிலையிலிருக்கின்றோம்.

திராவிடநாட்டில் தோழர் காமராஜ நாடார் போன்றவர்களும் ஓரளவில் இனப்பற்று கொண்டுள்ளதைக் கண்ட பார்ப்பனர்கள் வருங்காலத்தில் தங்கள் இனம் மேன்மையுற்று வாழ வழியில்லாமற் போகுமோ என அஞ்சி பல சூழ்ச்சிகளைக் கையாண்டு திராவிடர்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கே இம்மாதிரியான காலித்தனம் நடக்கத் தூண்டிவிடுகின்றனர். உள்ளபடியே காலித்தனம் செய்கின்ற திராவிடர்கள் தங்கள் வருங்கால நிலைமையை யுணராத காரணத்தால் கயமை நிறைந்த பார்ப்பனர் காட்டும் பாதையில் கவனத்தை செலுத்தி நடக்கின்றார்கள் என்பது பகுத்தறிவாளர்கள் அறிந்தசெய்தியே. நாம் ஏன் இங்ஙனம் கூறுகின்றோமென்றால் ஈரோட்டிலே நடந்த காலித்தனத்திற்குக் காரணம் காங்கரசிலிருக்கும் மூன்று பார்ப்பனர்கள்தான் என்பதை உணர்ந்துகொண்டோம்.

இம்மாதிரியே காலிகளின் போக்கு போய்க் கொண்டிருக்குமானால் பொதுமக்கள் சும்மா இருக்கமாட்டார்கள் என்பதைக் காலிகளுக்கும், அவர்களைக் கைப்பாவையாகக் கொண்டு இயக்கும் கயவர்களுக்கும் எச்சரிக்கையாக விடுக்கின்றோம். அதிகாரப் பீடத்தில் அமர்ந்திருக்கும் "அஹிம்சை மூர்த்தியின் அடியார்கள்" இந்த மாதிரியான காலித்தனத்தைப் போக்குவதற்கு ஏதாகிலும் தக்க வழி தேடுகின்றார்களா என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இல்லையேல் வருங்காலத்தில் நாட்டின் நிலைமை மிகக் கவலைக்கிடமானதாகும் என்று மந்சபையாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு:-இந்தக்காரியத்தால் இந்த ஊரில் காங்கரஸ்காரர்மீது வெறுப்பு ஏற்பட்டபிறகு இப்போது காங்கரஸ்காரர், இந்த ஊர்வலம் தாங்கள் நடத்தவில்லை என்றும், இந்த ஊரில் காங்கரஸ் கழகத்திலுள்ள கட்சிபேதத்தால், மற்றொரு கூட்டம். காங்கரஸ் பெயரைக் கெடுக்கச்செய்த குழப்பம் என்றும், அதை நடத்தியவர் ஒரு பார்ப்பன வக்கீல் என்றும் காங்கரஸ் தலைவர் சொல்லிவருகிறார்.

## விற்பனைக்கு

29-6-46 முதல் "குடி அரசு" பத்திரிகை கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

எம். ஏ. சண்முகநாதன்,
39, சன்னதி தெரு,
திருவத்திபுரம், (வ. ஆ.)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்காது, தங்கள் காலத்திலேயே அதை நீக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாயும், அப்படித் தங்கள் இழிவைத் தாங்கள் போக்கவேண்டுமென்று கூறுவது பிற இனத்தவரைத் தூஷிப்பதாகாதென்றும், தமக்கு எவர்மீதும் தனிப்பட்ட கோபம் கிடையாதென்றும், அதேபோல் தன்னையும் யாருமே விரோதிப்பதில்லையென்றும், தம்மினத்தவரின் முன்னேற்றமே யொழிய வேறு கிடையாதென்றும் கூறினார். குறிப்பாக வாலிபர்கள் தன்னைப்போல் வாலிப பருவத்தை வீணாக்கிவிட்டால் பின் கஷ்டப்பட்டு வருந்தவேண்டி நேரிடுமென்றும், தன்னையே உதாரணமாகக் கொண்டு தக்கத் தொண்டாற்ற இன்றே கிளம்பவேண்டுமென்றும் கூறி, தானும் தோழர் ஜின்னா அவர்களும் பல காலம் காங்கரசிலிருந்து தொண்டாற்றியபின்தான் இந்நிலையை யுணர்ந்திருப்பதாகவும், காங்கரசிலிருந்து வெளிப்பட்ட இன்றைய நிலையில்தான் தோழர் ஜின்னா அவர்கள் காங்கரசுக்கும் அரசாங்கத்திற்கும் நிபந்தனைகளை அறிவுறுத்தக்கூடிய நிலையிலே உயர்ந்துள்ளார் என்பதையும் உணர்ந்து, இனியும் இளைஞர்கள் மோசம் போகக்கூடாதென்று வற்புறுத்தினார்.

அத்துடன் மாநாட்டுக் காலை நிகழ்ச்சி முடிவுற்று உணவுக்காக மாநாடு கலைந்தது.

பிற்பகல் சரியாக 3-30 மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. விருதைத் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பியவர்கள், நாட்டுக்கு உயிர் கொடுக்கக்கூடிய தோழர்கள் பல்லாயிரவர் வேண்டுமென்றும், சென்ற இந்தி எதிர்ப்பின்போது கொடுத்த பலியாகிய தாலமுத்து நடராசன் போன்று இம்முறைப் பல தோழர்கள் பலியாக நேரிடுமென்றும், திராவிடத் தோழர்கள், குறிப்பாகக் கருஞ்சட்டைப் படையினர் இன்று எதற்கும் தயாராய் தாலமுத்து நடராசனை நினைவில் வைத்துக்கொண்டு இனத்தை இழிவினின்றும் மீட்க வழிதேடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு வருங்காலப் போராட்டத்

திற்குத்தான் எவ்வித தியாகத்திற்கும் தயாராயிருப்பதாய்த் தெரிவித்து, தியாகிகள் தாலமுத்து, நடராசன் ஆகியோர் படங்களைத் திறந்து வைத்தார்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள், தோழர் கைவல்லியம் அவர்கள் படத்தைத் திறந்துவைக்கையில் உண்மையாகவே தோழர் கைவல்லியம் அவர்களுடைய படம் பல மாநாடுகளில் திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், முதற்கண் ஈரோட்டுப் பாசறையில் அன்னாருடையப் படத்தைத் திறந்துவைக்கும் வாய்ப்புக்கிடைத்தமைக்குத்தான் உள்ளபடியே பெருமிதம் எய்துவதாகவும், தோழர் கைவல்லியம் அந்த நாளில் கல்லடிக்கும், சொல்லடிக்கும் நடுவே பெரியார் இராமசாமி சுயமரியாதைத் தோற்றுவித்த நேரத்திலே வலதுகரமாக நின்று வாதாடியவர் என்றும், அந்த நாள்களிலே கலியாண சந்தரங்களைக் கலங்கடித்தவரென்றும், இந்தக்காலத்திலே பண்டிதமணிகளுக்குப் பல பகிரங்கக் கடிதங்கள் எழுதி பதற வைத்தவரென்றும், இன்றுவரை [illegible] பண்டிதருமே பதில்கூறத் துணிந்து முன் வர வில்லையென்றும், கைவல்லியம் என்பது அவருடைய வாதாடும் திறம் கண்டு கொடுக்கப்பட்டப் பட்டப் பெயரென்றும் கூறினார். மேலும், இன்று நாட்டிலே பல பட்டதாரிகள் சுயமரியாதை இயக்கத்தில் தைரியமாக நின்று வாதாடுதற்கும், எதிரிகளுங்கண்டு அஞ்சத்தக்க நிலையிலே இயக்கம் வளர்ந்திருப்பதற்கும், வடமொழிச் சாஸ்திரங்களிலுள்ள ஆபாசங்களை மக்கள் அறிந்துகொள்ளுவதற்கும், புராணப் புரட்டுகளை மக்கள் புரிந்துகொள்ளுவதற்கும், கடவுளர்களின் கயமைத்தன்மை நிரம்பிய லீலா விநோதங்களை மக்கள் தெரிந்துகொள்ளுவதற்கும், மக்களை மடையர்களாக்கும் மதத்தின் பெயரைச்சொல்லி உயிர்வாழும் மதாச்சாரியார்களின் சூழ்ச்சிகளை மக்கள் உணர்ந்துகொள்ளுதற்கும், சாதிவேற்றுமைகளைக் கற்பித்த பார்ப்பனியத்தின் படுமோசச் செயலைப் பாமர மக்களும் அறிந்துகொள்ளுவதற்கும் காரணமாக இருந்தவர்; இருக்கின்றவர் தோழர் கைவல்லியம் அவர்கள்தான் என்றும், விளக்கமாகப் பேசினார்.

பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரத்துடன் மாநாடு முடிவுற்றது. தீர்மானங்கள் பின்னர் வெளிவரும்.

பின்னர் மாலை 7-மணிக்கு மாநாட்டுப் பந்தலிலேயே சேலம் தோழர் சித்தையன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 10000 மக்கள் வந்திருந்தனர். தோழர் சித்தையன் தலைமையுரையில் தற்கால அரசியல் நிலைமைபற்றி மிகவும் விளக்கமாகக் கூறி ஏற்படவிருக்கும், இடைக்கால சர்க்காரின் ஆட்சியில் திராவிடர்களின் இழி நிலையைப்போக்க வழி பிறக்காதென்றும், அதற்கு நாம்தான் ஆவன செய்ய வேண்டுமென்றும் தெளிவாக ஒருமணிநேரம் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தோழர் ஈ.வே.கி. சம்பத் அவர்கள் மந்திரி அவினாசலிங்கம் அவர்கள் பிரைமரி வகுப்புகளில் ஆங்கிலத்தை நீக்கியிருப்பதைக் கண்டித்துப் பேசி அதனை ரத்துச்செய்ய வேண்டுமென்றும், அதன் பெயரில் திராவிடர்களைப் போராட்டத்திற்கு அழைக்காதிருக்க வேண்டுமென்றும் சொற்பொழிவாற்றினார்,

பின்னர் பெரியார் இராமசாமி அவர்கள் நீண்ட கைதட்டலுக்கும் வாழ்த்தொலிக்கும் இடையே யெழுந்து வைசிராய் நிர்வாகச் சபையைப் பற்றியும், ஆறுகோஷ்டியாருடைய அந்தரங்க முயற்சி பற்றியும், இன்றைய நிலையிலே திராவிடர் கழகம் இருக்கவேண்டிய அவசியத்தையும், அது நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டையும் தற்காலக் காங்கிரஸ் சர்க்கார் உணவுப்பஞ்சத்தை நீக்கி, கள்ளமார்க்கட்டுப் பேயை ஒழிப்பதற்கு நேரில் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, தாங்களே தானியங்களை நேரில் வாங்கி ஜனத்தொகைக்குத் தக்கபடிக் கடைகள் வைத்து, பஸ், லாரிகளின் உதவிகளைக்கொண்டு ஒழுங்காக மக்களுக்கு வினியோகம் செய்ய வேண்டுமென்றும் சுமார் இரண்டுமணிநேரம் பேசியபின் தலைவர் சித்தையன் முடிவுரையுடன், நன்றி கூறலுக்குப்பின் கூட்டம் முடிந்தது.

---

## இயக்கச் செய்திகள்

14-5-46ல் திம்மராய சமுத்திரத்தில் தோழர் டி. கே. சீனுவாசன் தலைமையில் வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் அவர்கள் புரட்சிக்கவிஞர் வாசகசாலையைத் திறந்துவைத்தார். தோழர்கள் பொன்னன், நடேசன், நெடுமாறன், எஸ். சிவலிங்கம் சொற்பொழிவாற்றினர்.

o o

15-6-46ல் திருச்சி திராவிட மருத்துவர் நடிகர் கழக முதலாவது ஆண்டுவிழா ஆனந்தபுரம் திராவிட கழகத் தலைவர் தோழர் எஸ். டி. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. கே. சீனுவாசன் கொடியேற்றினார். பின் சமாசம் ஆசிரியர் சுல்தான் பக்தாதி, எம். எஸ். சுல்தான் பக்தாதி, எம். எஸ். சண்முகம், டாக்டர் பிச்சமுத்து ஆகியோர் பேசினர். ரூ. 1. குடியரசுக்கு அளிக்கப்பட்டது.

o o

15-5-46ல் வந்தவாசியில் காலஞ்சென்ற கௌரவ மாஜிஸ்டிரேட் ஸ்ரீரங்கம்பிள்ளையின் மறைவு குறித்த அனுதாபக்கூட்டம் தோழர் சுப்ரமணியன் (ஆசிரியர்) தலைமையில் நடந்த பொழுது தோழர்கள் வரதராசு, மறுவேலர் பேசினர்.

o o

18-5-46ல் செங்குன்றத்திற் கடுத்த விளாங்காடு பாக்கத்தில் சென்னை மதுரகவி வி. வி., முருகேச பாகவதர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தின்போது மாணவர் சுந்தரேசன் ஆசிரியர் தானியேல் ஆகியோர் பேசினர்.

o o

மன்னார்குடி 5-5-46ல் கே. ஆர். ஜி. பால் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் இளம்வழுதி, மகாதேவன், இரா. பாலசுப்பிரமணியம் பேசினர்.

o o

7-5-46ல் மகாதேவபுரத்தில் தோழர் சாரங்பாணி தலைமையில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் துவக்கப்பட்டது.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.